2012 மே 4]

ஆளுகைக்குட்பட்ட அந்தப் பகுதியில், தாங்கள் உத்தரவு பிறப்பித்தால்தான், மேற்கொண்டு எங்களால் அங்கே பூங்காவினை அமைப்பதற்கான பணியைச் செய்ய முடியும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உத்தரவு பிறப்பித்தால், அனுமதி அளித்தால், அதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றமும், நம்முடைய சட்டமன்றப் பேரவை வளாகமும், சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியும் பேரவைத் தலைவருடைய அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகள் என்ற காரணத்தினால், இதுபற்றி இங்கே விவாதிப்பது சரியல்ல. அதற்கென்று ஒரு குழு இருக்கின்றது. நிச்சயமாக அந்தக் குழுவிலே இந்தக் கருத்துகள் பரிசீலிக்கப்படும்.

*முற்பகல் 10-30*

*வினா வரிசை எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**207—**

## கொள்முதல் நிலையம்

***6815—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர், பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாபூர், எடப்பட்டி, கொட்டவாடி மற்றும் படையாச்சியூர் பகுதிகளில் பாக்கு கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர், பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாபூர், எடப்பட்டி, கொட்டவாடி

மற்றும் படையாச்சியூர் பகுதிகளில் பாக்கு கொள்முதல் நிலையங்கள் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

**திரு. சு. மாதேஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாபூர், எடப்பட்டி, கொட்டவாடி மற்றும் படையாச்சியூர் பகுதிகளில் மொத்தம் 3,940 ஏக்கர் நிலங்களில் பாக்கு மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒரு விவசாயி, வேளாண்மைத் துறையைச் சார்ந்தவர். இப்பகுதியில் ஆண்டொன்றுக்கு 5 கோடி ரூபாய் அளவிற்குக் கொள்முதல் செய்யப்படுகிறது. தயவுகூர்ந்து இதை மறுபரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மலைப் பயிரான பாக்குப் பயிரானது 5,456 ஹெக்டேர் நிலங்களில் பயிரிடப்பட்டு, 10,438 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், கோவை மற்றும் சேலம் மாவட்டங்களில் 30% அளவிலும், ஏனைய 15 மாவட்டங்களில் 70% அளவிலும் சாகுபடி செய்யப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் உற்பத்திச் செய்யப்படும் பாக்கு, செவ்வாய்ப்பேட்டை சந்தை மூலமாக கும்பகோணம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்கும், கோவை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பாக்கு மேட்டுப்பாளையம் சந்தை மூலமாக இதர மாநிலங்களுக்கும் விற்பனைச் செய்யப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் தமிழக அரசு, குறிப்பிட்ட பயிர்களுக்கு மட்டுமே வேளாண் செலவுகள் மற்றும் விலை குறித்த குழுவுடன் குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயம் செய்யுமாறு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்கிறது. அவ்வாறு குறிப்பிட்ட விவசாய விளைப் பொருள்களுக்கான பட்டியலில் பாக்குப் பயிர் இடம் பெறவில்லை. மேலும், பாக்கு உணவுப் பயிர்களின் வரிசையில் வராததாலும், உணவுப் பயிரான நெல் மட்டும் பொது

2012 மே 4]

விநியோகத் திட்டப் பயன்பாட்டிற்க்கு வருவதால் தானியமாக நெல் மட்டும் கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள இடங்களில் பாக்கு கொள்முதல் நிலையங்கள் அமைக்கின்ற சாத்தியக் கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

**திரு. சு. மாதேஸ்வரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பகுதியில் ஆண்டொன்றுக்கு சுமார் 30,000 ஏழை கூலி விவசாயிகள் இப்பாக்குப் பயிரை நம்பி கூலி வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், இடைத் தரகர்கள் மூலமாக ஒவ்வொரு பாக்கு விவசாயியும் 30 சதவீதம்தான் பயன் பெறுகிறார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முயற்சி செய்தால், கட்டயமாக நேரடியாக ஒவ்வொரு விவசாயியும் 100 சதவீதம் பயன் அடைவார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கூறி அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பாக்கினுடைய விலை ஓரளவுக்கு நல்ல நிலையில் இருக்கிறது. கிட்டத்திட்ட ஒரு ஹெக்டேருக்கு, முழுப் பாக்கிற்கு 2½ இலட்சம் ரூபாய் அளவிலும், சுத்தம் செய்து, வெட்டி வைத்த பாக்கிற்கு 5½ இலட்சம் ரூபாய் அளவிலும் இன்றைக்கு வருமானம் கிடைக்கிறது. அதுவே போதுமானதாக இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, தேவையிருப்பின் வருங்காலத்தில் அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி அவர்கள்.*

**திரு. ஆர். சின்னசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாக்கு சம்பந்தமாக, பாக்கில் ஏதாவது மருத்துவ*

[2012 மே 4

குணம் உண்டா? உண்டென்றால் எந்த வகையான மருத்துவ குணம் கொண்டது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொட்டைப் பாக்கு என்ன விலை என்று கேட்டால், நீங்கள் பட்டுக்கோட்டைக்கு வழி சொல்கிறீர்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், medicinal value பற்றிச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக பாரம்பரியமாக நாம் வெற்றிலையுடன் பாக்கைப் பயன்படுத்திக்கொள்கிறோம். கொட்டை பாக்கும், கொழுந்து வெற்றிலையும் பயன்படுத்தினால் நல்ல முறையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவ குணத்தைப் பொறுத்தவரையில், மனிதர்களுக்குக் குடல் புழு நீக்கம், தோல் வியாதி போன்றவற்றிற்குப் பயன்படுகிறது; வாய்ப்புண் குணம் அடைகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** கொட்டைப் பாக்கின் மருத்துவ குணங்கள் என்று பார்த்தால் குடல் புழு நீக்கம், தோல் வியாதிகளுக்குப் பயன்படுகிறது. வாய்ப்புண் குணமடைகிறது. இரத்தத்தில் சிவப்பணுக்கள் அதிகரிக்க உபயோகப்படுகிறது. விலங்குகளைப் பொறுத்தவரையில் அனைத்து விலங்குகளுக்கும் நாடா புழுக்கள் நீக்குவதற்காக பயன்படுகிறது. தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் தோல் பதனிடுதல், ஆலைகளில் சாயம் போடுதல் பொம்மை தயாரித்தல், சாக்லெட், மிட்டாய்கள், பிஸ்கட் தயாரித்தல், சேமியா தயாரித்தல் ஆகியவற்றில் பயன்படுகிறது. தீமையைப் பொறுத்தவரையில் அதிகமாக பாக்கைப் பயன்படுத்தினால் சிறுமூளை பாதிக்கப்படுகிறது, உடம்பிலுள்ள எதிர்ப்புச் சக்தி குறையும், குறிப்பாக ஜர்தா பாக்கு, பான்பராக் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2012 மே 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** *(குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன அந்தப் பாட்டு அவைக் குறிப்பிலிருந்து மொத்தமாக நீக்கப்படுகிறது. நான் சொன்னதையும் சேர்த்துதான்.*

*வினா வரிசை எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**208—**

## சொந்தக் கட்டடம்

*__4278—திருமதி ம. சக்தி:__*

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்திலுள்ள ஆச்சாள்புரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு அலுவலகத்துடன்கூடிய கிடங்கு கட்டுவதற்காக ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 30-11-2011-ல் ரூ.6 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதில் ரூ.3 இலட்சம் கடனாகவும், ரூ.1½ இலட்சம் பங்குத் தொகையாகவும், ரூ.1½ இலட்சம் மானியமாகவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, இச்சங்கத்திற்கு அலுவலகத்துடன்கூடிய கிடங்கு கட்டும் பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*